**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26.05.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "உழவர் உற்பத்தியாளர் குழுக்களை மேம்படுத்துதல்" நிகழ்ச்சி**

சிறுதானிய ஆராய்ச்சியின் நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023 முன்னிட்டு, சர்வதேச கருத்தரங்கு மற்றும் எதிர்காலம் சார்ந்த உணவு பொருட்கள் கண்காட்சியின் அங்கமாக "உழவர் உற்பத்தியாளர் குழுக்களை மேம்படுத்துதல்" நிகழ்ச்சி நடைபெற்றது . இவ்விழாவினை சி றப்பிக்க தமிழக ஆளுநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேந்தர் திரு .ஆர்.என்.ரவி அவர்கள் , கலந்து கொண்டு சிறுதானிய கண்காட்சியை பார்வையிட்டார் . தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் வெ .கீதாலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

நமது ஆளு நரின் தலைமை விருத்தினர் உரையில் சிறுதானியங்களின் முக்கியத்துவம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் பயன்பாடு , நிலையான உணவு சங்கிலியில் சிறுதானியங்களின் பங்கு மற்றும் ஆரோக்கியமான வாழ்வு பற்றி இந்நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் வறட்சியை தாங்கும் தன்மை , அனைத்து பருவநிலை மற்றும் மண் வகைகளுக்கு ஏற்ப சிறுதானியப் பயிர்கள் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு நிலையான வருமானம் தரக்கூடியது என்றுரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் ஒரு அங்ககமாக , 10 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தன . இதன் மூலம் சிறந்த வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்லுதல் , வேளாண்மையில் தொழில் முனைவோரை உருவாக்குதல் , ஏற்றுமதியை ஊக்குவித்தல் என விவசாயிகளுக்கான அனைத்து நலன்களையும் எளிதாக கொண்டு செல்ல முடியும் . இந்நிகழ்ச்சியின் முடிவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் மு.இரவீந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**